செ.கு.எண் 238 நாள் :- 06-12-2011

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 6.12.2011

1) கடலூர் மாவட்டம், **வெலிங்டன் நீர்த்தேக்கத்திலிருந்து** கடலூர் மாவட்டத்திலுள்ள பாசனப் பகுதிகளின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு கடலூர் மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **7.12.2011** முதல் வெலிங்டன் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கடலூர் மாவட்டத்தில் **15,820 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

2) தருமபுரி மாவட்டம், **வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து** பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கும், **சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து** பழைய ஆயக்கட்டு ஏரிகளுக்கும், புதிய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்கும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு தருமபுரி மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **7.12.2011** முதல் தருமபுரி மாவட்டம் வாணியாறு மற்றும் சின்னாறு நீர்த்தேக்கங்களிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இடைவெளிவிட்டு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில், வாணியாறு நீர்த்தேக்க பாசன அமைப்பின்கீழ் உள்ள **10,517 ஏக்கர்** நிலங்களும், சின்னாறு நீர்த்தேக்கத்தின் பாசன அமைப்பின்கீழ் உள்ள **3,198 ஏக்கர்** நிலங்களும் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3) கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், **பாரூர் பெரிய ஏரியிலிருந்து** இரு பிரதான கால்வாய்களில், சுழற்சி முறையில், இரண்டாம் போக சாகுபடிக்காகத் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து இரு பிரதான கால்வாய்களில் சுழற்சி முறையில், இரண்டாம் போக சாகுபடிக்காக **7.12.2011 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியின் பாசன அமைப்பின்கீழ் உள்ள **4,729** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்